# நான் அபிஷேகம் பண்ணினவர்களை நீங்கள் தொடாமலும்

1

2

என்னிடத்தில் விசுவாசமாயிருக்கிற இந்தச் சிறியரில் ஒருவனுக்கு இடறல் உண்டாக்குகிறவன் எவனோ

# நான் அபிஷேகம் பண்ணினவர்களை நீங்கள் தொடாமலும்



## வியாக்கியானம்

சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள்
பேசிய செய்திகளிலிருந்து

## சங்கீதம் 105:12-15

---

12. அக்காலத்தில் அவர்கள் கொஞ்சத் தொகைக்குட்பட்ட சொற்ப ஜனங்களும் பரதேசிகளுமாயிருந்தார்கள்.

13. அவர்கள் ஒரு ஜனத்தைவிட்டு மறு ஜனத்தண்டைக்கும், ஒரு ராஜ்யத்தைவிட்டு மறு தேசத்தாரண்டைக்கும் போனார்கள்.

14. அவர்களை ஒடுக்கும்படி ஒரு வருக்கும் இடங்கொடாமல், அவர்கள் நிமித்தம் ராஜாக்களைக் கடிந்து கொண்டு:

15. நான் அபிஷேகம்பண்ணினவர்களை நீங்கள் தொடாமலும், என்னுடைய தீர்க்கதரிசிகளுக்குத் தீங்கு செய்யாமலும் இருங்கள் என்றார்.

---

இதைக்குறித்து கர்த்தருடைய தீர்க்கதரிசியாகிய சகோ.பிரன்ஹாம் கூறுவதை நாம் வாசிக்கலாம்:

ஆனால் ஆய்வாளர் எல்லாம் அதனதன் இடத்தில் இருக்கிறது என்று கண்டால், இப்பொழுது அவர் முத்திரை போடுவார். அது அடைய வேண்டிய இடத்தை அடையும் வரைக்கும், முத்திரையை உடைக்க யாருக்கும் தைரியம் இருக்காது, பார்த்தீர்களா?



சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள் பேசிய செய்தியிலிருந்து

# செய்தி: 59-12-16 பரிசுத்த ஆவி என்பது என்ன?

28. இப்பொழுது, கவனியுங்கள், பரிசுத்த ஆவி ஒரு அடையாளம். பரிசுத்த ஆவி ஒரு முத்திரையும் கூட. அது தேவன் தாம் தெரிந்து கொண்ட பிள்ளைகளுக்கு கொடுத்த அடையாளம். அதை புறக்கணித் தால், ஜனங்களின் மத்தியிலிருந்து அறுப்புண்டு போகவேண்டும். அதை ஏற்றுக்கொண்டால், உலகத்தையும் உலகத் திலுள்ள காரியங்களையும் அப்புறப் படுத்தி, தேவனுடைய பொருளாகி விடுதல். அதற்கு அங்கீகாரமாக தேவன் முத்திரையை அதன் மேல் போடுகிறார்.

நான் முன்பு ஹாரி வாட்டர் பரி ரெயில் நிர்வாகத்தில் பணி புரிந்தேன். நாங்கள்

சென்று சரக்கு ரெயில் பெட்டிகளை நிறைப்பது வழக்கம். பின்னால் நின்று கொண்டிருக்கும் என் சகோதரன் டாக்' (Doc) எனக்கு உதவி செய்வார். பெட்டி களை நிறைத்துக் கொண்டிருக்கும்போது, ஆய்வாளர் (Inspector) அதை பரிசோதிப் பார். அதை நெருக்கமாக நிறைக்காமல் தளர்ந்து நிறைத்துள்ளதால் சரக்குகள் விழுந்து உடையக்கூடும் என்று அவர் கண்டால், அல்லது அவை ஒன்றொ டொன்று மோதி நொறுங்கிவிடும் என்று அவர் எண்ணினால், அவர் அந்த பெட்டிக்கு முத்திரை போடமாட்டார். சரக்குகளை நெருக்கமாக பெட்டியில் அடுக்கி, எல்லாம் சரியாயுள்ளதென்றும், ரெயில் ஓடும் போது ஏற்படும் குலுக்க லினால் உள்ளேயுள்ள சரக்குகளுக்கு சேதம் ஒன்றும் ஏற்படாது என்றும் தீர்மானித்த பிறகே அதற்கு முத்திரை போடுவார்.'

29. அதுதான் காரியம். நாம் முத்திரை போடப்படாததன் காரணம், நாம் காரியங்களில் நெருக்கமில்லாமல் மிகவும் தளர்ந்தவர்களாய் காணப்படுகிறோம். ஆய்வாளர் உங்கள் வாழ்க்கையை ஆராய்ந்து பார்க்கும்போது, உங்கள் ஜெப ஜீவியத்தில், உங்கள் சுபாவத்தில், நீங்கள் மற்றவர்களைக் குறித்து அவதூறாய் பேசும் விஷயத்தில் உங்களைத் தளர்ந்தவராகக் கண்டால், அந்த பெட்டிக்கு அவர் முத்திரை போடமாட்டார். சில அசுத்தமான பழக்க வழக்கங்கள், சில இழிவான செயல்கள், சில மோசமான எண்ணங்கள், அவரால் பெட்டிக்கு முத்திரை போட முடியாது.

**ஆனால் ஆய்வாளர் எல்லாம் அதனதன் இடத்தில் இருக்கிறது என்று கண்டால், இப்பொழுது அவர் முத்திரை போடுவார்.**

அது அடைய வேண்டிய இடத்தை அடையும் வரைக்கும், முத்திரையை உடைக்க யாருக்கும் தைரியம் இருக்காது, பார்த்தீர்களா?

**“நான் அபிஷேகம் பண்ணினவர்களை நீங்கள் தொடாமலும், என்னுடைய தீர்க்கதரிசிகளுக்குத் தீங்கு செய்யாமலும் இருங்கள். நான் உங்களுக்குச் சொல்லுகிறேன், முத்திரை போடப்பட்ட இந்த சிறியரில் ஒருவனுக்கு இடறல் உண்டாக்க அல்லது அசைக்க முயல்பவன் எவனோ, அவனுடைய கழுத்தில் எந்திரக் கல்லைக்கட்டி, சமுத்திரத்தின் ஆழத்திலே அவனை அமிழ்த்துகிறது அவனுக்கு நலமாயிருக்கும்"** (சங்.105:15; மத்.18:6) அது என்ன கூறுகிறதென்றும் பார்த்தீர்களா?

30. பரிசுத்த ஆவி என்பது அது தான். அது உங்கள் உறுதி (Assurance); அது உங்கள் பாதுகாப்பு; அது உங்கள் சாட்சி; அது உங்கள் முத்திரை; நான் பரலோ கத்தை நோக்கி சென்று கொண்டிருக்கிறேன் என்பதற்கு அது என் அடையாளம்! பிசாசு என்ன கூறினாலும் கவலையில்லை, நான் பரலோகத்தை நோக்கி சென்று கொண் டிருக்கிறேன் ஏன்? அவர் என்னை முத்தரித்தார்; அவர் எனக்கு அதைக் கொடுத்தார். அவர் தம்முடைய ராஜ்யத் துக்குள் என்னை முத்தரித்தார். நான் மகிமையை நோக்கி சென்று கொண்டிருக் கிறேன் காற்று பலமாக அடிக்கட்டும்; சாத்தான் என்னவெண்டு மானாலும் செய்யட்டும்; தேவன் மீட்கப்படும் நாள் வரைக்கும் என்னை முத்தரித்துவிட்டார். ஆமென்! பரிசுத்த ஆவி அதுவாகத்தான் இருக்கிறது. நீங்கள் அதை பெற்றுக்

கொள்ளவேண்டும். அதுவில்லாமல் என்னால் ஒன்றும் செய்யமுடியாது. எவ்வளவோ கூறமுடியும், நான் என்ன குறிப்பிடுகிறேன் என்று நீங்கள் புரிந்து கொண்டீர்களென்றும் நான் நிச்சயம் நம்புகிறேன்.



# ஜாக்கிரதையாயிருங்கள். “நான் அபிஷேகம் பண்ணினவர்களை நீங்கள் தொடாமலும், என்னுடைய தீர்க்கதரிசிகளுக்குத் தீங்கு செய்யாமலும் இருங்கள்.” அது சரியா?



சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள் பேசிய
செய்தியிலிருந்து

# செய்தி: 60-10-02 இனத்தான் மீட்பர்

133. இப்பொழுது போவாஸ் ஒருவன் மாத்திரமே, அவள் வயலில் பொறுக்கினதால் ஏற்பட்ட களைப்பை தீர்த்து அவளுக்கு இளைப்பாறுதல் அளிக்க முடியும். ஓ, அது மிகவும் இனிமையானது. போவாஸ்.... அவளை வயல் வெளியில் கண்டபோது.... (இதை நான் காணத் தவற முடியாது). போவாஸ் அவளை வயல் வெளியில் கண்டபோது, “நீ யார்?” என்று கேட்டான்.

அவள், “என் பெயர் ரூத்” என்றாள். “ஓ, எங்களுடன் தங்க வந்த மோவாபியப் பெண்ணா?” “ஆம்.”

134. “உன்னைக் குறித்து நான் கேள்விப்பட்டேன். வேறு வயலில் போகாதே” ஊம்! அது எனக்கு பிடிக்கும். “மிஷன் - தாவுதலை ஆரம்பிக்காதே. சரியாக என்னுடைய வயலிலேயே தரித்திரு. என்னோடே தங்கியிரு. அவன் அவளை நேசித்தான். இங்கேயே இரு. என்னுடன் இரு. ஓரிடத்திலிருந்து மற்றொரு இடத்துக்கு ஓடிச் செல்லாதே. இங்கேயே தங்கியிரு.”

135. நீ செய்தியை விசுவாசித்தால், அதை அப்படியே விடாது ஒட்டிக் கொண்டிரு. பாருங்கள்? கிரயம் என்னவானாலும் அதிலே தங்கியிருந்து, தொடர்ந்து செல், “இதை, அதை, அல்லது மற்றதை நான் தியாகம் செய்ய வேண்டுமென்றாலும், நான் குடிப்பழக்கத்தை

நிறுத்த வேண்டியதாயிருந்தாலும், நான் திருடுவதை விட்டு விட வேண்டியதாயிருந்தாலும், நான் அதிலே நிலைத்திருப்பேன்." பாருங்கள்?

136. அவன் மறுபடியும்... அவன், "இப்பொழுது அவர்கள் உன்னைத் தொல்லைப்படுத்த மாட்டார்கள். உன்னை இழிவாகப் பேசாதபடிக்கு நான் இளைஞருக்கு கட்டளையிட்டிருக்கிறேன்." ஆமென். அது எனக்குப் பிரியம்: அவனுடைய பாதுகாப்பு. அதைக் கூறினது யார்? அறுப்புக்கு எஜமான்.


137. ஜாக்கிரதையாயிருங்கள். "நான் அபிஷேகம் பண்ணினவர்களை நீங்கள் தொடாமலும், என்னுடைய தீர்க்கதரிசிகளுக்குத் தீங்கு செய்யாமலும் இருங்கள்."

அது சரியா? "இந்தச் சிறியரில் ஒருவ னுக்கு இடறல் உண்டாக்குகிறவன் எவனோ, அவனுடைய கழுத்தில் ஏந்திரக் கல்லைக் கட்டி, சமுத்திரத்தின் ஆழத்திலே அவனை அமிழ்த்துகிறது அவனுக்கு நலமாயிருக்கும்." அது சரியா? அவர்க ளுக்கு எவ்வித இடறலையும் உண்டாக்க வேண்டாம்.

"ஒருவரும் உன்னைத் தொடாதபடிக்கு நான் அவர்களுக்குக் கட்டளையிட்டிருக் கிறேன்". ஓ, இந்த உலகத்தைக் கவனி யுங்கள். அது துன்புறுத்தும் ஒன்று. அவர் களுடைய நேரம் வந்து கொண்டிருக்கிறது.



அவர் பிரசங்க ஊழியத்தின் மூலம்
போதிய பணம்
சம்பாதிக்கவில்லையென்று அவருடைய
மனைவி கருதினாள். எனவே அவர்
வேலை தேட வேண்டுமென்று கூறினாள்.
அவர் எந்த நேரமும் வேதாகமத்தையே
படித்துக் கொண்டிருந்தார்.



சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள் பேசிய
செய்தியிலிருந்து

# செய்தி: 61-12-31E தேவன் எங்களோடே இருந்தால் இந்த அற்புதங்களெல்லாம் எங்கே?

6. இன்றிரவு அநேகர் வந்துள்ளதைக் காண்பது மிகவும் நன்று. சகோ. கிரகாம் ஸ்னெல்லிங், “நாம் சென்று சீயோன் மலையின் மேல் வாழுவோம்” என்னும் அந்த பழைய பாடலைப் பாடி முடிக்கின்ற தருணத்தில் நான் உள்ளே நுழைந்தேன்.

7. ரபீ லாசனை தெரிந்தவர் இங்கு யாருமில்லை என்று நினைக்கிறேன். யாருக்காவது அவரைத் தெரியுமா? ஆம், இரண்டு மூன்று பேருக்கு - சகோ. கிரகாம்... சகோ. ஸ்லாட்டர் அந்த பாடல் எனக்கு சகோ. லாசனை ஞாபகமூட்டியது. அவர் எப்படி அந்த பாடலைப்

பாடுவாரென்று ஞாபகமுள்ளதா? அவர் சிறு உருவம் படைத்தவர். அவரை நான் 'ரபீ' என்றழைப்பதுண்டு. ஏனெனில் அவர் ஒரு சிறு தட்டையான கறுப்பு தொப்பியை அணிவது வழக்கம். அவர் ஒரு பெந்தெகொஸ்தே போதகர், ஆமை ஓடு மூக்கு கண்ணாடியை அணிந்திருப்பார், நான், 'காண்பதற்கு யூத ரபீயைப் போல் இருக்கிறீர்" என்று அவரிடம் கூறியிருக்கி றேன். எனவே அவரை எப்பொழுதும் நாங்கள்: 'ரபீ லாசன்' என்றழைப்போம், மிகவும் அருமையான சகோதரன். அவருக்கு மிகவும் வயதாகியிருந்தது. அவருக்கு கூன் விழுந்திருந்தது. அவர் வாகன விபத்துக்குள்ளாகி, அவருடைய முழங்கால்கள் விரைத்துப் போனது. அவர் தம்முடைய கக்கத்தண்டத்தை, இல்லை, ஊன்றி நடக்கும் தடியை இந்த பக்கத்தில் தொங்க விடுவார். நான் இந்த நாற்காலி

யில் அமர்ந்து கொண்டிருப்பேன். “மானிட வாழ்க்கையின் சக்கரங்கள் சுழலாமல் நிற்கும் நேரத்தில்” என்னும் பாடலின் அந்த பாகத்தை அவர் பாடும்போது, அவர் தமது நடக்கும் தடியைக் கையிலெடுத்து, என் கழுத்தில் அதை கொக்கியிட்டு, என்னை இப்படி அவர் பக்கம் இழுத்து, அவருடைய கைகளை என் தோளின் மேல் போட்டு, “நாம் சென்று சீயோன் மலையின் மேல் வாழுவோம்” என்று பாடுவார்.

8. இங்குள்ள வேறு யாருக்காவது ரபீலாசனைத் தெரியுமா? ஒரு சிலருக்கு மாத்திரமே. அப்படியானால், இதை கூற விரும்புகிறேன். அவருக்கு ஒரு விசித்திர மான காரியம் சம்பவித்தது. அவர் நல்ல பிரசங்கி, அருமையான சகோதரன். அவர் பெரிய பொறுப்பு ஒன்றும் பெற்றிருக்க வில்லை. அவருடைய ஊழியம் அப்படிப் பட்டதல்ல. ஆனால் அவருக்கு அளிக்கப்

பட்டிருந்த பொறுப்பில் அவர் உண்மை யாய் வாழ்ந்தார் என்று நானறிவேன். அது தான் முக்கியமானது.

9. அவர் பிரசங்க ஊழியத்தின் மூலம் போதிய பணம் சம்பாதிக்கவில்லையென்று அவருடைய மனைவி கருதினாள். எனவே அவர் வேலை தேட வேண்டுமென்று கூறினாள். அவர் எந்த நேரமும் வேதா கமத்தையே படித்துக் கொண்டிருந்தார். ஒரு நாள் அவளுக்கு அவர் மேல் அதிக கோபமூண்டது. அவள் அவருடைய மடியிலிருந்த வேதாகமத்தை பிடுங்கி, அடுப்பில் தீ மூட்டி அதை தீயிலிட்டு எரித்தாள். சில மாதங்கள் கழித்து அவள் கிறிஸ்துமஸ் மரத்துக்கு விளக்குகள் பொருத்திக்கொண்டிருந்த போது, கிறிஸ்து மஸ் மரம் தீப்பிடித்து அவளை அதே இடத்தில் எரித்துப் போட்டது. பாருங்கள், நீங்கள் எதை விதைக்கிறீர்களோ, அதையே

அறுப்பீர்கள், "நான் அபிஷேகம் பண்ணினவர்களை நீங்கள் தொடாமலும், என்னுடைய தீர்க்கதரிசிகளுக்குத் தீங்கு செய்யாமலும் இருங்கள்". பாருங்கள்?

10. தேவனுடைய வார்த்தையைக் குறித்து ஒரு காரியம். அங்கு விபத்து நேர்ந்த அவர்கள்; சாத்தான் அவர்களுடைய பொருட்களை அழிக்க முயன்றான். நான் இதைக் கூறும் போது, அவர்கள் எழுந்து நின்று, யாரோ ஒருவர் உள்ளே வருவதற்காக இடங் கொடுப்பதைக் காண்கிறேன். அவர்களுடைய வாகன இணைப்பு வண்டி (trailer) அந்த அறையிலிருந்த எல்லாமே எரிந்து சம்பலாகி விட்டன. நான் அங்கு சென்று கண்டேன். அங்கு எரியாமலிருந்தவை ஆசீர்வதிக்கப்பட்ட வேதாகமும். என் புத்தகமும், சகோ. ஆஸ்பார்னின் புத்தகமும் என்று நினைக்கிறேன். மற்றவை

அனைத்துமே அந்த இணைப்பு வண்டியில் எரிந்து சாம்பலாகி யிருந்தன. நான் வேதாகமத்தை கையிலெடுத்த போது, அது வெளிப்புறத்தில் சிறிது புகைந்து கொண் டிருந்தது. கர்த்தருக்கு சித்தமானால், என்றா கிலும் ஒரு நாள் அந்த வேதாகமத்தை, பிரசங்க பீடத்துக்கு கொண்டு சென்று, “வானமும் பூமியும் ஒழிந்து போகும், என் வார்த்தைகளோ ஒழிந்து போவதில்லை” என்னும் பொருளின் பேரில் பேச விரும்புகிறேன் என்று அந்த சகோதரனிட மும் சகோதரியிடமும் கூறினேன். எல்லாமே போய்விட்ட பிறகு, வார்த்தை இன்னும் அங்குள்ளது. தேவன் தமது வார்த்தையை எவ்வளவு கவனமாகப் பாதுகாக்கிறார் என்பது மிகவும் அற்புத மல்லவா? இந்த வார்த்தை உங்களுக்குள் வர நீங்கள் அனுமதிப்பீர்களானால், அவர்

உங்களையும் கவனமாகப் பாதுகாப்பார். அது உண்மை.

11. வெள்ளம் வந்த சமயம், இங்கு ஓரிரவு நான் பிரசங்கித்துக் கொண்டிருந் தேன். அப்பொழுது என் வேதாகமத்தை இங்கு விட்டு சென்று விட்டேன். 1937ம் ஆண்டு வெள்ளம் திடீரென்று ஒரே இரவில் வந்து, இந்த கூடாரத்துக்குள்ளும் தண்ணீர் வந்து, இந்த பிரசங்க பீடத்தை மேலே கூறை வரைக்கும் உயர்த்திக் கொண்டு சென்றது. அப்பொழுது இங்கு வேறு ஒரு கூறையும் இல்லை. பிரசங்க பீடத்திலிருந்த வேதாகமம் மூழ்கிப் போவதற்குப் பதிலாக மிதந்து கூரை வரை எட்டினது. நான் இங்கு சுற்றிலும் படகோட்டி செல்ல வேண்டியதாயிருந்தது? தண்ணீர் மட்டம் இறங்கின போது, வேதாகமும் கீழே இறங்கி, நான் கடைசியாக எந்த அதிகாரத்தைப் படித்துக்

கொண்டிருந்தேனோ, அதே அதிகாரத்தில் வேதாகமம் திறக்கப்பட்டதாய் காணப்பட்டது. “வானமும் பூமியும் ஒழிந்து போகும், என் வார்த்தைகளோ ஒழிந்து போவதில்லை” அது உண்மை. அவர் அற்புதமானவர். இல்லையா?



நீங்கள் யுத்தம் செய்தால், தேவனால் யுத்தம் செய்ய முடியாது (If you fight, God can’t fight). தரித்து நில்லுங்கள்; தேவனை யுத்தம் செய்ய விடுங்கள், அவர் அதை சம்பவிக்கும்படி செய்வார். ஆமென். அவர் குற்றம்கண்டுபிடிக்கும் ஒவ்வொருவரையும், எல்லாவற்றையும் வெட்கத்திற்குட்படுத்துவார்.



சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள் பேசிய செய்தியிலிருந்து

## செய்தி: **தேவன் என்பவர் யார்?,** ஆகஸ்டு 15, 1950

---

**52.** ஓ, என்னே. நான் அவரை என்னுடைய முழு இருதயத்தோடும் நேசிக்கிறேன். நான் கர்த்தராகிய இயேசுவை என்னுடைய முழு ஆத்துமாவோடும், இருதயத்தோடும், மனதோடும் நேசிக்கிறேன் என்பதை எல்லாரும் அறிந்து கொள்ள நான் விரும்புகிறேன்.

சமீபத்தில் யாரோ ஒருவர் சொன்னார், ஒரு குறிப்பிட்ட பட்டணத்தில் என்னை பயமுறுத்தி, “நீ தெய்வீக சுகமளித்தலை பிரசங்கம் பண்ணுவதை விட்டுவிடாவிட்டால், நாங்கள் மேடையில் ஒரு வெடி குண்டைப் போட்டுவிடுவோம்” என்றார்.

நான், “அந்தப் புகை காய்ந்துபோகும் முன்பே நான் மகிமையில் இருப்பேன் (The smoke won’t dry till I’ll be in glory). அதெல்லாம் சரிதான்” என்றேன். நாம் ஏன் பயப்படுகிறோம்? என்னே, தேவன் உங்கள் பட்சத்தில் இருந்தால், உங்களுக்கு விரோத மாக யார் இருக்க முடியும்? என்னிடத்தில் விசுவாசமாயிருக்கிற இவர்களுக்கு வருத்த முண்டாக்குவதை (தீங்குசெய்வதைக் - மொழிபெயர்ப்பாளர்) காட்டிலும் உன்னுடைய கழுத்தில் ஏந்திரக்கல்லை கட்டி தொங்க விட்டு (hanged) சமுத்திரத்தின் ஆழங் களுக்குள் மூழ்கடிப்பது நலமாயிருக்கும் என்று வேதாகமத்தில் எழுதப்பட்டுள்ளது உங்களுக்குத் தெரியுமா?

“என்னிடத்தில் விசுவாசமாயிருக்கிறவர் களை இந்த அடையாளங்கள் பின்தொட

ரும். அபிஷேகம் பண்ணப்பட்ட என்னுடையவர்களைத் தொடாதிருங்கள். என்னுடைய தீர்க்கதரிசிகளுக்கு தீங்கு செய்யாதிருங்கள்.”

நீங்கள் யுத்தம் செய்தால், தேவனால் யுத்தம் செய்ய முடியாது (If you fight, God can’t fight). தரித்து நில்லுங்கள்; தேவனை யுத்தம் செய்ய விடுங்கள், அவர் அதை சம்பவிக்கும்படி செய்வார். ஆமென். அவர் குற்றம்கண்டுபிடிக்கும் ஒவ்வொருவரையும், எல்லாவற்றையும் வெட்கத்திற்குட்படுத்துவார். சகோதரர்களே, நீங்கள் அவரை விசுவாசிக்கிறீர்களா? நாம் விசுவாசத்திற்கு அமைதலாகிவிடுவோம் (settle down).



என்னிடத்தில்
விசுவாசமாயிருக்கிற இந்தச்
சிறியரில் ஒருவனுக்கு இடறல்
உண்டாக்குகிறவன் எவனோ



# மத்தேயு 18:6


என்னிடத்தில் விசுவாசமாயிருக்கிற இந்தச் சிறியரில் ஒருவனுக்கு இடறல் உண்டாக்குகிறவன் எவனோ, அவனுடைய கழுத்தில் எந்திரக்கல்லைக் கட்டி, சமுத்திரத்தின் ஆழத்திலே அவனை அமிழ்த்துகிறது அவனுக்கு நலமாயிருக்கும்.

---

## வியாக்கியானம்

சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள் பேசிய செய்திகளிலிருந்து

**ஆனால் அவள் பொல்லாதவளாய் இருக்க இதைக் கூறுவாளானால், "இந்தச் சிறுவரில் ஒருவனுக்கு இடறலுண்டாக்குகிறதைப் பார்க்கிலும், உன்னுடைய கழுத்தில் எந்திரக் கல் கட்டப்பட்டு, நீ சமுத்திரத்தில் தள்ளுண்டு போவது உனக்கு நலமாயிருக்கும்."**



சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள் பேசிய செய்தியிலிருந்து

# செய்தி: 64-08-30M கேள்விகளும் பதில்களும் COD #21

Q.330. **சகோ. பிரன்ஹாமே, நான் வார்த்தையில் நிலை நின்று, அதே சமயத்தில் என் மனைவிக்காக நான் உண்மையில் அக்கறை கொண்டிருக்கிறேன் என்பதை எவ்வாறு அவளுக்குக் காண்பிக்க முடியும்? ஏனெனில் "நீ விசுவாசிப்பதை அல்லது பிரசங்கிப்பதை ஏன் செயல்படுத்தக் கூடாது?" என்னும் கேள்வி எழுந்துள்ளது.**

114. நல்லது, இந்த கேள்வி கேட்டது. உங்கள் மனைவியானால், அதைக் கேட்க அவளுக்கு எல்லா உரிமையுமுண்டு, நீங்கள் உங்களை சரிபடுத்திக் கொள்வது நலம். பாருங்கள்? ஆனால் அவள் பொல் லாதவளாய் இருக்க இதைக் கூறுவா

ளானால், "இந்தச் சிறுவரில் ஒருவனுக்கு இடறலுண்டாக்குகிறதைப் பார்க்கிலும், உன்னுடைய கழுத்தில் எந்திரக் கல் கட்டப்பட்டு, நீ சமுத்திரத்தில் தள்ளுண்டு போவது உனக்கு நலமாயிருக்கும்." (லூக்.17:2). இப்பொழுது, அதுதான் உங்கள் கேள்வி.

115. ஒருக்கால் இந்த மனைவி அந்த விதமானவளாய் இல்லாமல் இருக்கக் கூடும். அவள் ஒருக்கால் வித்தியாசமானவ ளாய், நல்லவளாய் இருக்கக் கூடும். நீங்கள் என்ன செய்கிறீர்கள் என்று பார்க்க அவள் உங்களை பரிசோதிக்கக்கூடும்.

116. இப்பொழுது நீங்கள் அவளுடன் அன்பில் நிலைத்திருங்கள், அவள் இயேசுவை உங்களில் காணட்டும். அப்படிச் செய்யுங்கள். பாருங்கள்? நீங்கள் தொடர்ந்து செல்லுங்கள். சில... இக்காலை

யில் ஒரு நபரைக் குறித்து ஒரு சிறு விவரணத்தை அளிக்க விரும்புகிறேன்... ஒரு சமயம் இந்த ஸ்திரீ பரிசுத்த ஆவியைப் பெற்றுக் கொண்டாள். அவள் மிகவும் இனியவள். அவர்கள்... அவள் சொன்னாள். நல்லது, அவளுடைய வாழ்க்கை கடுமையாயிருந்தது. அவளு டைய கணவன் ஒரு குடிகாரன். எனவே, அவள் தொடர்ந்து சகித்துக் கொண்டே வந்தாள். அவன், "தேனே, சபைக்குச் செல்ல விரும்பினால், போய் வா. நான் ப்ரவுன் டெர்பி மதுக்கடைக்கு சென்று வருகிறேன். நீ போய் விட்டு வா" என்பான். எனவே அவர்கள் இவ்விதம் வாழ்க்கை நடத்தி வந்தனர். இந்த மதுக்கடை முன்பு போனிஃப்பர் என்று அழைக்கப்பட்டது. பழங்காலத்தவராகிய உங்களில் அநேகருக்கு மூலையில் இருந்த போனிப்பர் ஞாபகமிருக்கும். இப்பொழுது

அது ப்ரவுன் டெர்பி என்று அழைக்கப் படுகிறது. அப்படித்தான் என்று நினைக் கிறேன்.

117. அந்த மதுக்கடையில் அவன் குடித்துக் கொண்டிருக்கும் போது, முதலாவதாக என்ன தெரியுமா, ஒரு இரவு சபையைக் குறித்தும் கிறிஸ்தவர்களைக் குறித்தும் ஒரு கேள்வி எழுந்தது. அங்கு உட்கார்ந்து கொண்டிருந்த குடிகாரர்களில் ஒருவன், "இனிமேல் கிறிஸ்தவர்கள் என்று யாரும் கிடையாது. அப்படி யாருமே கிடையாது. இந்த கூட்டம் அனைத்தும் மாய்மாலக்காரரே: அவர்கள் இங்கு புகைபிடித்துக் கொண்டும் குடித்துக் கொண்டும், நாம் செய்கிறதையே செய்து கொண்டு தங்களைக் கிறிஸ்தவர்கள் என்று அழைத்துக் கொள்கின்றனர். அப்படி யாருமே கிடையாது" என்றானாம்.

118. இந்த குடிகாரன் உடனே எழுந்து நின்று, "ஒரு நிமிடம் பொறு. எனக்குத் தெரிந்த அப்படிப்பட்ட ஒருத்தி இருக்கி றாள்" என்றானாம்.

அவர்கள், "அது யார்" என்று கேட்க,

அவன் “அது என் மனைவி என்றா னாம். பாருங்கள்? அவள் உப்புத் தன்மை கொண்டவளாயிருந்தாள். அவன் அதை எந்நேரமும். கிரகித்துக் கொண்டே வந்தான். மற்ற குடிகாரன், “அவளுக்கு இறுக்கம் நேரிட்டால், நான் பந்தயம் கட்டுகிறேன், அவள் கிறிஸ்தவளாக இருக்க மாட்டாள்" என்றானாம்.. .

இவனோ, “இல்லை, அவள் அப் பொழுதும் கிறிஸ்தவளாயிருப்பாள்; அதை நான் நிரூபித்துக் காட்டுகிறேன். நாம் என்ன செய்யலாம் என்று சொல்லுகிறேன். நாம் வீட்டுக்குப் போவோம், அவள்

கிறிஸ்தவளா இல்லையா என்பதைக் காண்பிக்கிறேன். நாம் வீட்டுக்குச் சென்று குடித்தவர்களைப் போல் நடிப்போம்” என்றானாம். அவன் வீட்டுக்கு சென்று கதவைத் தட்டினான். எல்லோருமே தள்ளாடிக் கொண்டு உள்ளே வந்தனர். அவன், "நீங்கள் ஏன் இப்படி சுற்றிலும் உட்காரக் கூடாது?" என்று விருந்தாளி களைப் பார்த்துக் கேட்டு, அவர்களை மிகவும் அன்பாக வரவேற்றான். அவன், மனைவியிடம், "எங்களுக்கு இரவு உணவு சமைத்து தா. எங்களுக்கு பன்றி இறைச்சியும் (ham) முட்டைகளும் வேண்டும்” என்றான். வீட்டில் இவை உண்டு என்று அவன் அறிந்திருந்தான். எனவே அவள் பன்றி இறைச்சியும் முட்டைகளும் சமைத்துக் கொண்டு வந்தாள். அவன் மேசையின் அருகில் வந்து அவர்களைப் பார்த்து விட்டு,

அவனுடைய தட்டை எடுத்து அதில் வைக்கப்பட்டிருந்த உணவை தரையில் ஓங்கியடித்து, “இந்த விதமாக முட்டை களை சமைத்தால் எனக்குப் பிடிக்காது என்று உனக்குத் தெரியுமல்லவா? வாருங் கள், இங்கிருந்து போவோம்" என்று தன் சகாக்களைப் பார்த்துசொன்னான்.

119. அவர்கள் வெளியே சென்று அங்கு உட்கார்ந்து கொண்டனர். அவள் வெளியே வந்து, "அன்பே, நான் வருந்து கிறேன். அதை நான் சரியாக சமைக்க வில்லை. நான் வேறு முட்டைகளை சமைத்து கொண்டு விடுகிறேன்" என்றாள்.

120. அவன், "ஓ, முட்டாள்தனம், அந்த விதமாக முட்டைகளை சமைப்பது எனக்கு பிடிக்காது என்று உனக்குத் தெரியுமே" என்று இவ்விதமாக அவளைத் திட்டிக் கொண்டேயிருந்தான். அவர்கள் அங்கு

வெளியே உட்கார்ந்து கொண்டு குடித்தவர்களைப் போல் நடித்துக் கொண்டிருந்தனர். அவள் தன்னையே கண்டனம் செய்து கொண்டு, மிருதுவான குரலில்,

இயேசு சிலுவையை தனியே சுமந்து உலகிலுள்ள அனைவரும் சும்மாயிருக்க வேண்டுமா? ஒவ்வொருவருக்கும் ஒரு சிலுவையுண்டு எனக்கும் ஒரு சிலுவை யுண்டு

மரணம் என்னை விடுவிக்கும் வரைக்கும் பிரதிஷ்டை செய்யப்பட்ட இந்த சிலுவையை சுமப்பேன்.

என்று பாடிக் கொண்டிருந்தாளாம். ஒரு குடிகாரன் மற்றொரு குடிகாரனைப் பார்த்துக் கொண்டு, "அவள் உண்மையில் கிறிஸ்தவள், அவள் அதை பெற்றிருக்கிறாள்" என்றானாம். அந்த ஸ்திரீ அவளுடைய கணவனையும் அங்கிருந்த மற்ற

அனைவரையும் கிறிஸ்துவினிடம் அன்றிரவு வழிநடத்தினாள். பார்த்தீர்களா? ஏன்? பாருங்கள்? உண்மையில் இனியவராயிருங்கள். இதை ஞாபகம் கொள்ளுங்கள், அதைக் குறித்து அவருக்கு எல்லாம் தெரியும்.

121. எனவே, சகோதரியே, அல்லது சகோதரனே, அது சகோதரன் தான். ஏனெனில் இங்கு தன் மனைவியைக் குறித்து அவர் கேட்டிருக்கிறார். நீங்கள் உப்புத்தன்மை கொண்டவராயிருங்கள். தாகமடைவதற்கு அங்கு ஏதாகிலும் இருக்குமானால் அவள் தாகமடைவாள். இல்லையென்றால், இதை ஞாபகம் கொள்ளுங்கள், உங்களுக்குத் தவறான நபர் இருந்தால், ஆயிர வருட அரசாட்சியின் போது சரியான ஒன்று கிடைக்கும். நீங்கள் தொடர்ந்து சென்று கொண்டே

யிருங்கள். எல்லா தவறுகளும் அங்கு சரியாக்கப்படும்.



# கிறிஸ்தவர்களுக்கு விரோதமாக நீங்கள் செய்வதைக் குறித்து கவனமாயிருங்கள்



சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள் பேசிய செய்தியிலிருந்து

# செய்தி: 53-06-07A கிறிஸ்துவின் ஊழியம்

இப்பொழுது, இந்த ஜனங்களைக் கவனியுங்கள். தேவன் அவருடைய வார்த்தையை நிறைவேற்றக்கூடிய ஏதோவொரு இடத்தைக் கண்டுபிடிப்பதற்காக சுற்றிலும் நோக்கிப் பார்க்கும்படியாக தேவன் பூமிக்கு இறங்கி வந்தார் என்பதில் சந்தேகமேயில்லை. அவர் நீதிமானாகிய சகரியா என்ற பெயருடைய ஒரு மனிதனைக் கண்டுபிடித்தார். தேவன் எப்போதுமே தாழ்ந்த நிலையில் உள்ளவர்களையும், பின்தங்கியவர்களையும், புறக்கணிக்கப் பட்டவர்களையும் பெற்றுக்கொள்ள காத் திருக்கிறார். நான் அவரை நேசிப்பதற்கு அதுதான் காரணம்; அவர் என்னை அழைத்தார். இந்த உலகத்தின் தரித்திர

மானவர்களையும், இருதயத்தில் தாழ்மை யானவர்களையும், கற்றுக்கொள்ள வாஞ் சிக்கிறவர்களையும்...

21. அவர் சகரியாவைக் கண்டு பிடித்தார், அவன் இன்னும் தன்னுடைய உத்தியோகத்தின் கடமையில் - தூபங் காட்டுவதில் உண்மையுள்ளவனாயிருந் தான். சகரியா அந்நாளில் அத்தூபத்தை எரிப்பதற்காக உள்ளே போன போது, இப்பொழுது அவன் ஒரு வயதான மனிதனாக இருந்தான், அவனுடைய மனைவியோ பிள்ளை பெறும் காலத்தை கடந்தவளாயிருந்தாள், அப்பொழுது கர்த்தருடைய தூதன் பலிபீடத்தின் வலது பக்கத்தில் நின்றான். சகரியா திரும்பி அவரைப் பார்க்கும் போது, அது பிரதான தூதனாகிய காபிரியேலாக இருந்தது.

பாருங்கள், தேவன் அநேக தூதர்களை அனுப்பலாம், நம்மெல்லாருக்கும் பாது காக்கும் தூதர்கள் உண்டு. தேவனுடைய பிள்ளைகள், தேவன்...

இயேசு, “இந்தச் சிறியவர்களை அற்பமாய் எண்ணாதபடிக்கு எச்சரிக்கை யாயிருங்கள்; அவர்களுக்குரிய தேவ தூதர்கள் பரலோகத்திலே என் பிதாவின் சமுகத்தை எப்போதும் தரிசிக்கிறார்கள்” என்று கூறினார். அது உண்மையா?

கிறிஸ்தவர்களுக்கு விரோதமாக நீங்கள் செய்வதைக் குறித்து கவனமா யிருங்கள்.

அவர்களில் ஒருவனுக்கு இடறல் உண்டாக்கினால், உங்களுடைய கழுத்தில் ஒரு கல்லைக்கட்டி சமுத்திரத்தில் அமிழ்த் துகிறது நலமாயிருக்கும் - நலமாயிருக்கும். கவனமாயிருங்கள். பாருங்கள்.

22. இப்பொழுது, இது... அவர் அநேக தூதர்களை அனுப்புகிறார், ஆனால் காபிரியேல் மகிமையிலிருந்து இறங்கி வருவதைக் குறித்து நீங்கள் கேள்விப்படும் போது, அது வெறுமனே ஒரு சிறிய காரியம் அல்ல; ஏதோவொரு பெரிய காரியம் சம்பவிக்கும்படி நியமிக்கப்பட் டிருந்தது. காபிரியேல்... இங்கே இப்பொ ழுது அது உள்ளது. காபிரியேல் கிறிஸ் துவின் முதலாம் வருகையை அறிவித் தான். காபிரியேல் கிறிஸ்துவின் இரண் டாம் வருகையையும் அறிவிப்பான். ஆமென். அவன் மகிமையில் அவருடைய மகத்துவத்தின் வலது பாரிசத்தில் நின்று கொண்டிருக்கும் பிரதான தூதனாக இருக்கிறான்.



# மனந்திரும்பின பிள்ளைகளுக்கு விரோதமாகச் செய்கிறவனுக்கு ஐயோ!



# செய்தி: 56-08-05 சபையும் அதன் நிலையும்

167. இவர்களுடைய எண்ணங்களைச் சுத்தப்படுத்தும்படி வேண்டுகிறேன். இருதயங்களைச் சுத்தம் செய்யும். இருதயங்களைச் சமாதான முள்ளவைகளாகவும் நற்குணமுள்ளவைகளாகவும் மாற்றியருளும். இவர்கள் இங்கிருந்து எழுந்து போகுமுன் இவர்களுடைய மனங்களைத் திருப்பியருளும். தங்கள் வாழ்க்கையை முழுவதுமாக ஒப்படைக்கச் செய்யும்.

**இவர்கள் திரும்பி தங்கள் வீட்டிற்குப் போகும் போது, புருஷன் கோபித்தாலும், மனைவி கோபித்தாலும், அயலான் கோபித்தாலும், சொந்தக்காரர் கோபித்தாலும்,**

**இவர்கள் புறாவைப்போல சாந்த குண முள்ளவர்களாயிருக்கச் செய்யும்.**

168. **எப்படியானாலும் நீதியைச் சரிகட்டுகிறவர் நீரே. பழிவாங்குகிறவர் நீரே** (ரோமர் 12:19).

இது சத்தியம் என்பதை, தேவரீர், நாங்கள் அறிந்து கொண்டோம்.

ஜனங்களே, மௌனமாக நில்லுங்கள்.

நற்குணராக இருங்கள்.

தேவனைத் தேடுங்கள்.

அவருடைய ஆட்டுக்குட்டியினிடம் வாருங்கள். உண்மை! கட்டாயம்!

மேய்ப்பன் தன் மந்தைக்குத் தன் உயிரைக் கொடுக்கிறான்.

அவர் வந்து தமது மந்தையை வழி நடத்துவார்.

அவரை விட்டுத் தாண்டிப் போகிற வனுக்கு ஐயோ!

## மனந்திரும்பின பிள்ளைகளுக்கு விரோதமாகச் செய்கிறவனுக்கு ஐயோ!

"என்னிடத்தில் விசுவாசமாயிருக்கிற இந்தச் சிறியரில் ஒருவனுக்கு இடறல் உண்டாக்குகிறவன் எவனோ, அவனுடைய கழுத்தில் எந்திரக்கல்லைக் கட்டி, சமுத் திரத்தின் ஆழத்திலே அவனை அமிழ்த் துகிறது அவனுக்கு நலமாக இருக்கும்" சிறுவருக்குரிய 'தேவ தூதர்கள் பரலோ கத்திலே என் பிதாவின் சமுகத்தை எப் பொழுதும் தரிசிக்கிறார்கள்' (மத் 18:6,10). தேவரீர், நீர் இவர்களுக்குச் செய்வது போலவே எனக்கும் செய்தருளும்.

169. தேவரீர் நான் நற்குணமுள்ள வனாயிருக்க இன்று காலை இந்த பீடத்தின் மீது நிற்கிறேன். இன்று காலை மாத்திர மல்ல, ஒவ்வொரு காலை வேளையிலும், ஒவ்வொரு நாளும் நான் மௌனமாகவும் நற்குணமுள்ளவனாயும், இயேசுவைப் போல இருக்கக் கிருபை செய்யும். பிதாவே அப்படி இருக்க உதவி செய் தருளும். அன்பின் ஆழமான அலைகள் எங்கள் உள்ளத்திலே புரண்டோடச் செய் தருளும்.

அமைதி, அமைதி, அதிசயமான அமைதி; பிதா அனுப்பின அமைதி (இதை நீங்கள் அனுபவிக்கிறீர்களா?) என்றென் றும் என் ஆவியின் மேல் அமைதி, அமைதி, அதிசயமான அமைதி

# அவர்களுக்கு இடறல் உண்டாக்குவது, அவர்களை ஏதாவது விஷயத்தில் நிலை தடுமாற வைப்பது உங்களுக்கு ஆகாது



சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள் பேசிய செய்தியிலிருந்து

# செய்தி: 61-01-01 வெளிப்படுத்தின விசேஷம் 4 அதிகாரம் #2

இயேசு கூறினார், ''அவன் இந்தச் சிறுவரில் ஒருவனுக்கு இடறலுண்டாக்குகிறதைப் பார்க்கிலும் அவனுடைய கழுத்தில் ஏந்திரக்கல் கட்டப்பட்டு, அவன் சமுத்திரத்தில் தள்ளுண்டு போவது அவனுக்கு நலமாயிருக்கும்'' அவர்களுக்கு எந்தத் தீங்கும் செய்யப்படக் கூடாது.

அவர்களுக்கு இடறல் உண்டாக்குவது, அவர்களை ஏதாவது விஷயத்தில் நிலை தடுமாற வைப்பது உங்களுக்கு ஆகாது.

இந்தச் சிறியரில் ஒருவனுக்கு ஒரு இடறல் உண்டாக்குவதைவிட, நீங்களே

உங்களை சமுத்திரத்தில் மூழ்கடித்துக் கொள்வதோ, அல்லது இப்பூமியில் பிறவாமல் இருந்திருந்தாலோ நல்லதா யிருக்கும்.

அந்தக் கருத்தில்தான் அவர் கூறி னாரோ? அவர் பொய் உரைக்க முடியுமா? அப்போஸ்தலர்கள் அதைக் கூறினரா? இல்லை. இயேசுவே அதைக் கூறினார்.

என்னை விசுவாசிக்கிற இந்தச் சிறி யரில் ஒருவனுக்கு நீங்கள் ஒரு இடறலைக் கூடக் கொண்டு வந்தால் என்று கூறினார்.

# ஆகவே நீங்கள் அவருடைய பிள்ளையாயிருக்கும் வரையிலும் உலகம் உங்களைத் தொடாதிருப்பதாக (அது சரி !)



சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள் பேசிய செய்தியிலிருந்து

# செய்தி: 59-12-23 கேள்விகளும் பதில்களும் COD #12

52. நாம் அவருடைய பிள்ளைகள் என்கின்ற அந்த பரிபூரண நிச்சயத்தை தேவன் நமக்கு அளித்துள்ளார்.

நீங்கள் உங்கள் பிள்ளைகளை திருத்து வது போல, நான் என் பிள்ளைகளை திருத்துவது போல, நாம் அவருடைய பிள்ளைகளாக இருப்பதால் அவர் நம்மைத் திருத்துகிறார்.

பிள்ளைகள் தவறு செய்யும் போது நாம் அவைகளைத் திருத்துகிறோம். என் பிள்ளைகள் தவறு செய்யும் போது ஒரு தகப்பன் என்கின்ற வகையில் அப்பொ ழுது அவர்களை திருத்துவது என் கடமையாயிருக்கிறது. அப்படியானால்,

தேவனுடைய பிள்ளைகள் தவறு செய்வார்களானால், ஒரு தகப்பன், பிதா என்கின்ற வகையில் அவருக்கும் அது ஒரு கடமையாகும், ஆகவே அவர் உங்களை திருத்துவார். அதை நினைவில் மாத்திரம் கொள்ளுங்கள், நீங்கள் திருத்தப்படு வீர்கள்.

**ஆகவே நீங்கள் அவருடைய பிள்ளையாயிருக்கும் வரையிலும் உலகம் உங்களைத் தொடாதிருப்பதாக** (அது சரி!)

ஏனெனில் அவர், என்னிடத்தில் விசுவாசமாயிருக்கிற இந்தச் சிறியரில் ஒருவனுக்கு இடறல் உண்டாக்குகிறவன் எவனோ, அவனுடைய கழுத்தில் ஏந்திரக் கல்லைக் கட்டி, சமுத்திரத்தின் ஆழத்தில் அவனை அமிழ்த்துகிறது அவனுக்கு நலமாயிருக்கும்.





# பரிசுத்த ஆவியைப் பெற்றிருக்கிற ஜனங்களைப் பார்த்து நகைத்தால், அது சரிதான் என்று அவர்கள் யூகித்தனர்



# செய்தி: 62-04-08 யூகித்தல்

142. தானியேல், அவர்கள் அங்கே யூகித்தனர்...

அதெல்லாம் சரியாக இருக்கும் என் றும், தேவனுடைய பரிசுத்த பாத்திரங்களை எடுத்து, அவைகளில் பருகலாம் என்று அவர்கள் யூகித்தனர்.

பரிசுத்த ஆவியைப் பெற்றிருக்கிற ஜனங்களைப் பார்த்து நகைத்தால், அது சரிதான் என்று அவர்கள் யூகித்தனர்.

அவர்களைக் கேலி செய்வது சரியாக இருக்கும் என்று அவர்கள் யூகித்தனர்.

வேதாகமம், ‘இந்தச் சிறியரில் ஒருவ னுக்கு இடறல் உண்டாக்குகிறவனா யிருந்தால், உன்னுடைய கழுத்தில் ஏந்திரக்

கல்லைக் கட்டி, சமுத்திரத்தின் ஆழத்திலே உன்னை அமிழ்த்துகிறது உனக்கு நலமாயிருக்கும் (மத்தேயு 18:6, மாற்கு 9:42)' என்று கூறுகிறது.



**எங்களுடைய அடிகளை நடத்தும் கர்த்தாவே, ஆதனால் இந்த சிறு பிள்ளைகளுக்கு முன்பாக நாங்கள் எந்த விதமான, காரியங்களை செய்து அவர்களுடைய பாதையில் நாங்கள் தடுக்கல்களாய் இராதபடி செய்யும்**



சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள் பேசிய செய்தியிலிருந்து

# செய்தி: 65-10-31A வழி நடத்தும் தன்மை (என்னைப் பின்பற்றி வா)

141. அன்புள்ள இயேசுவே இப்பூமியில் உமது புனித யாத்திரையின் போது ஒரு நாள், இந்த மதிய வேலையிலே நான் பேசிக்கொண்டு இருந்ததான பிள்ளைகள் போன்றவர்களை உம்மிடத்தில் கொண்டு வந்தார்கள். சீஷர்கள் அவரிடத்தில் எஜமான் மிகவும் களைத்துப்போய் இருக்கிறார். இன்று காலையில் அவர் பிரசங்கம் செய்துள்ளார், அவர் இதையும் அதையும் எல்லாம் பிரசங்கம் செய்தார், அவர் மிகவும் களைத்துப் போய் இருக்கிறார், அவரை தொந்தரவு செய்யாதீர்கள் என்று சொன்னார்கள்.

142. ஆனால் இயேசுவே நீர் சொன்னீர். சிறு பிள்ளைகள் என்னிடத்தில் வருவதற்கு தடை செய்யாதீர்கள். பரலோக ராஜ்யம் அவர்களுடையது.

143. தேவனாகிய கர்த்தாவே இந்த சிறு பையன்களையும் பெண்களையும் நீர் இன்றைக்கு ஏற்றுக்கொள்ளும். இந்த நீதியின் பள்ளியிலே, இங்கே நம்முடைய சகோதரர்கள் தங்களை விலக்கிக்கொண்டு வனாந்தரத்தில் பக்கமாக வந்து, உலகத்தின் காரியங்களிலிருந்து தங்களை வேறு பிரித்து கொள்ளும் வாஞ்சையுள்ள குடும்பங்களை வெளியே கொண்டுவந்து. உனக்காக மட்டும் கொஞ்ச காலம் தங்கி ஜீவிக்கும் படியாக வந்துவிட்டார்கள். இப்பொழுது அவருடைய பிள்ளைகள் இங்கே இருக்கிறார்கள். அவர்களுடைய தகப்பனையும் தாயையும் அவர்களுடைய

ஜீவியத்தை கவனித்துக்கொண்டு இருக்கிறார்கள். ஏனென்றால் நாங்கள் செய்கின்ற ஒவ்வொரு காரியத்திலேயும் நாங்கள் மாதிரிகளாக இருக்கிறோம். ஓ அன்புள்ள தேவனே வானத்தையும் பூமியையும் சிருஷ்டித்தவரே. எங்களுடைய அடிகளை நடத்தும் கர்த்தாவே, ஆதனால் இந்த சிறு பிள்ளைகளுக்கு முன்பாக நாங்கள் எந்த விதமான, காரியங்களை செய்து அவர்களுடைய பாதையில் நாங்கள் தடுக்கல்களாய் இராதபடி செய்யும்.

144. ஏனெனில் இவ்விதமாக சொல்லப்பட்டிருக்கிறது இந்த சிறுபிள்ளைகளுக்கு இடறலை கொண்டு வருவதைக் காட்டிலும், ஏந்திரக் கல்லை தங்கள் கழுத்தில் கட்டி கடலில் அமிழ்த்துவது இலகுவாயிருக்கும் என்று, நீர் சொன்னீர். அவர்களுக்குரிய தேவதூதர்கள் பரலோ

கத்திலேயே என் பரம பிதாவின் சமூகத்தை எப்பொழுதும் தரிசிக்கிறார்கள் என்று. ஆகவே அந்த மகாதூதன் பாதுகாக்கும் தூதன் இந்த ஒவ்வொரு சின்ன ஆத்து மாவையும் காக்கிறார்கள். இன்று மத்தி யானத்துக்கு பிறகு இந்த சிறுவர்கள் இங்கே உட்கார்ந்துகொண்டு கண்களை விரிவாய் திறந்துகொண்டு, பார்த்துக் கொண்டும். கேள்விகளுக்கு பதில் சொல் லிக்கொண்டும், வேதத்தில் உள்ள குழந்தை கதைகளுக்கு செவி கொடுத்துக்கொண்டும். இப்படி அந்த இரண்டு வாலிபர்களும் தங்களுடைய தெரிந்து கொள்ளுதலை செய்தார்கள் என்றும் கேட்டு, அவர்கள் ஒவ்வொருவரும் அவருடைய ஜீவியத்தை உமக்கு அர்ப்பணம் செய்தார்கள். ஓ யெகோவா தேவனே அவர்களை வழி நடத்தும். அவர்களை பாதுகாரும், அவர்

கள் தாமே இந்தப் பெரிய வழி நடத்துபவரை. இயேசு கிறிஸ்துவை கண்டடைவார்களாக. தகப்பனார், தாயார், உபாத்தியாயர் ஆசிரியர்கள், யாவரும் தீர்ந்து போன பிறகு அது அவர்களை வழி நடத்தும். நீர் மோசேக்கு செய்தது போன்று, அவர்களுடைய தாழ்மையான குழந்தை ஜெபங்கள் உம்மிடத்திற்கு வந்தது போன்று, அவர்களையும் நித்திய ஜீவ னுக்கு வழி நடத்தும். உம்முடைய ஊழியக்காரன் என்ற முறையில் கர்த்தாவே நான் அவர்களை உம்மிடத்தில். உம்மு டைய கிரீடத்திற்கு வெற்றி சின்னங்களாக முத்துக்களாகவும் சமர்ப்பிக்கிறேன். அவர்களை இப்பூமியில் உம்முடைய கனத்திற்காக உபயோகியும் கர்த்தாவே. இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் ஆமென்...





நாம் தேவனிடத்திலுள்ள நம்முடைய பயத்தையும் கிறிஸ்தவர்கள் பேரிலுள்ள மரியாதைகளையும் இழந்து விட்டோம். ஓ, நாம் எப்படியாக தேவனிடம் திரும்பி வந்தாக வேண்டியிருக்கிறது



சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள் பேசிய செய்தியிலிருந்து

# செய்தி: 61–0211, ஆபிரகாம், பிப்ரவரி 11, 1961

66. பின்னிட்டுப் பார்க்க வேண்டாம். "கலப்பையின்மேல் தன் கையை வைத்துப் பின்னிட்டுப் பார்க்க திரும்புகிறவன் உழுவ தற்குத் தகுதியுள்ளவன் அல்ல." சகோதரனே, அதுதான் இந்தச் சபையில் உள்ளது. நீங்கள் கலப்பையின்மேல் உங்கள் கைகளை வைத்து, உங்களை நீங்களே பரிசுத்த ஆவியால் நிறைந்த பெந்தெகோஸ்தேகாரன் என்று அழைத்துக் கொண்டீர்கள்; உலகத்தை நோக்கிப் பார்த்துக் கொண்டிருப்பதையும், உலகத்தைப் போல நடந்துகொள்வதையும், உலகத்தைப் போன்று உங்களை மினுமினுப் பாக்குவதையும், மற்றும் இந்தவிதமான காரியங்கள் எல்லாவற்றையும், உலகத்தின் காரியங்களைக் கொண்டிருப்பதையும், ஜெபக்

கூட்டத்திற்கு வருவதற்குப் பதிலாக வீட்டிலே தங்கி தொலைக்காட்சி பார்ப்பதையும் நிறுத்தி விடுங்கள். பாவிகள் பீடத்திற்கு வருகையில், வரும்படியாக எவரிடமிருந்தும் ஒருபோதும் ஒரு அசைவும் இல்லை, இப்போதெல்லாம் ஆர்வமே இல்லாதிருக்கிறது.

நான் உங்களுக்கு ஒரு சிறு எச்சரிப்பை விடுக்கட்டும், எசேக்கியேல் 9வது அதிகாரத் தில், வேதாகமம் இவ்வாறு கூறுகிறது, பரிசுத்த ஆவியை உடைய அடையாளம் போடுபவ னிடம், “நீ நகரத்தை உருவப்போய், அழ்ற் குள்ளே செய்யப்படுகிற அருவருப்புகளி னிமித்தம் பெருமூச்சுவிட்டழுகிறவர்கள் மேல் அடையாளம் போடு” என்றார். எத்தனை பேர் எப்பொழுதாவது அதை வாசித்திருக்கிறீர்கள்? நிச்சயமாக. அவர்களைத் தவிர வேறு யாரையும் அடையாளம் இடாதே. உங்கள் விரல்களால் எண்ணிப்பார்த்து, ஒரு எடுத்துக் காட்டாக அவர்களை என்னிடம் தாருங்கள்

பார்க்கலாம், இந்தப் பட்டணத்தில் செய்யப் பட்ட அருவருப்புகளினிமித்தமாக இரவும் பகலும் பெருமூச்சுவிட்டழுகிற எத்தனை பேரை இந்தக் கட்டிடத்தில் இருக்கிற யாராவது ஒருவர் காட்ட முடியும்? நான் ஒரு விரலையும் காணவில்லை. "நகரத்தில் செய் யப்படுகிற அருவருப்புகளினிமித்தமாக பெரு மூச்சுவிட்டழுகிறவர்கள் மேல் மாத்திரம் முத்திரை போடு." அவர்களில் ஏராளமானோர் அதற்கு விரோதமாக பிரசங்கம் பண்ணவும் கூட பயப்படுகிறார்கள். அவர்களில் நிறைய பேருக்கு பயம் தான். கோழியின் மார்பெலும் புக்குப் (wishbone) பதிலாக முதுகெலும்பு (backbone - தைரியம்) உடைய மனிதர் களை தேவன் நமக்குத் தருவாராக. ஆம், ஐயா. வேறொரு யோவான்ஸ்நானகனை நமக்குத் தருவாராக. அவனை அனுப்பி, அவனைப் பரிசுத்த ஆவியால் அபிஷேகம் பண்ணுவாராக, அது எதையும் அப்பட்ட

மாகவும், வெளிப்படையாகவும் கூறப் பயப் படாது (not pull any punches), ஆனால் அவன் வார்த்தையோடு தரித்திருப்பான். அவன் வார்த்தையோடு தரித்திருந்தால், பயப் பட மாட்டான். தேவன் தம்முடைய வார்த் தைக்கு ஆதரவு கொடுப்பார்.

நான் எல்லாவிதமான நெருக்கமான இடங்களிலும் வந்திருக்கிறேன், அங்கே பிசாசுகளும் மற்ற எல்லாமே எழும்பிக் கொண்டிருக்கும். அவர்கள் குருடாக அடிக் கப்பட்டும், அடித்து வீழ்த்தப்பட்டதையும் மற்ற எல்லாவற்றையுமே கண்டிருக்கிறேன். பயப்படாதீர்கள்; சரியாக அங்கே வார்த் தையிலேயே தரித்திருந்து, தேவன் என்ன செய்கிறார் என்று கவனியுங்கள். நீங்கள் தேவனோடு சரியாகத்தான் இருக்கிறீர்களா என்று நிச்சயப்படுத்திக் கொள்ளுங்கள். அந்த வார்த்தையோடு தரித்திருந்து, என்ன சம்பவிக்கிறது என்று கவனியுங்கள்.

67. சகோதரன் ஆர்கன்பிரைட் அவர்கள் அருகில் இருப்பாரானால், அந்தக் கதையை அவரால் உங்களிடம் கூற முடியும்; சுவிட் சர்லாந்தில், அல்லது அது பிரான்ஸ் - ஜெர்மனியில் நடந்தது என்று நம்புகிறேன், எப்படியாக ஒரு பக்கத்தில் பதினைந்து மந்திரவாதிகளும் மறுபக்கத்தில் பதினைந்து மந்திரவாதிகளும் அந்தக் கூடாரத்தை வீசி அடித்துக்கொண்டு போகும்படியாக, ஒரு புயலை கூப்பிட்டுக் கொண்டிருந்தார்கள். அந்தக் கூடாரத்தை காற்றினால் வீசியடித்துச் செல்லப் போவதாக இருந்தார்கள். அவர்கள் அதைச் செய்யப் போவதாக எங்களிடம் கூறினார்கள். அவர்கள் அங்கே உட்கார்ந்து, அந்த இறகுகளை வெட்டி, “பிதா, குமாரன், பரிசுத்த ஆவி...?... பிதா, குமாரன், பரிசுத்த ஆவி, (என்ற) மூன்று உன்னத வார்த்தை களை” maneuvers -ஐ செய்யத் தொடங் கினார்கள், அவர்கள் அதைச் சொல்லிக்

கொண்டிருந்தார்கள். அவ்விதமாக எல்லா வற்றையும் அவர்கள் செய்ய, இதோ அந்தப் புயலும் வந்தது. அங்கே அந்தக் கூடாரத்தில் பத்தாயிரக்கணக்கான ஜனங்கள் மேலும் கீழும் குதித்துக் கொண்டிருந்தார்கள் என்று அதே காரியத்தை உங்களிடம் கூறுவார். நான், "சகோதரன் ஆர்கன்பிரைட் அவர்களே, ஜெபம் பண்ணுங்கள். சகோதரன் லோஸ்டர் அவர்களே, இதை மொழிபெயர்க்க வேண் டாம். பரலோகப் பிதாவே, நான் அந்த விமானத்திலிருந்து இங்கே மேலே கர்த்த ராகிய இயேசுவின் நாமத்தில் இறங்கி யுள்ளேன், ஏனென்றால் நீர் தான் என்னை இங்கே அனுப்பியிருக்கிறீர். நீர் என்னைப் பாதுகாத்துக்கொள்வதாக வாக்குப்பண்ணி யிருக்கிறீர். இவ்விதமான ஒரு காரியத்தில் என்னால் என்ன செய்ய முடியும்? நான் இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் இந்தப் புயலைக் கடிந்து கொள்கிறேன்" என்றேன். ஒரு முழு விநாடி நேரத்திலேயே அந்தப்

புயல் சரியாக அந்தக் கூடாரத்தின் மேலே வெவ்வேறாகப் பிரிந்து (சிதறிப்) போய், பின்னால் விலகிப் போயிற்று. இடி முழக்கமும் இவ்விதமாக குறைந்து இயல்பான நிலைக்குப் போய்விட்டது (roll back). அப்போது ஆயிரக்கணக்கானவர்கள் இரட்சிக் கப்படும்படியாக, பீடத்திற்கு வந்தார்கள். அந்த மந்திரவாதிகள் தோற்கடிக்கப்பட்டார்கள்.

68. வெளியே அந்தக் கூட்டத்தில் உட்கார்ந்து கொண்டிருந்த அந்த மனிதன், மற்றவர்களின் கவனத்தைக் கவரும்படியாக, அந்த மந்திரச் சொற்களில் ஒன்றை என்மேல் பிரயோகித்து, என்னை ஒரு நாயைப் போல குரைக்கும்படி செய்ய முயற்சித்துக் கொண் டிருந்தான், அவனுக்குத் தெரியாது. அவன் அங்கே இருந்தான், நான் தொடர்ந்து அந்த வினோதமான ஆவியை உணர்ந்தேன். நான், "நான் அதை அழைப்பதை வெறுக்கிறேன், ஏனென்றால் அவன் யாரோ ஒருவருடைய

நண்பனாக இருக்கிறான். இயேசு, ‘அவைகள் ஒன்றாக வளரட்டும்; நீங்கள் களைகளைப் பிடுங்கும்போது, கோதுமையையும் பிடுங்கி விடுவீர்கள்’ என்று கூறியிருக்கிறார்” என்று எண்ணினேன். நான் அவ்வாறு தொடர்ந்து போய்க்கொண்டிருந்தேன், அவனும் தொடர்ந்து அதைச் செய்து கொண்டிருந்தான். சற்று கழிந்து, பரிசுத்த ஆவியானவர் என்னிடம் தொடர்ந்து பேச, நான் திரும்பிப் பார்த்து, “வஞ்சகனே, யாரோ ஒருவரை ஏமாற்ற முயற்சிக்கும்படியாக, தேவனுடைய ஆராதனை நடக்கும் இந்தக் கூட்டத்திற்குள் நீ ஏன் வந்திருக்கிறாய்?” என்றேன். நான் அவனிடம் பேசிக் கொண்டிருந்தது போன்று, அவன் தொடர்ந்து சுற்றும் முற்றும் பார்த்துக் கொண்டிருக்க, நான், “உன்னிடம் தான் நான் பேசிக் கொண்டிருக்கிறேன்” என்றேன். நான் அவனுடைய பெயரை அழைத்தேன். நான், “தேவனுடைய ஆவிக்கு நீ இதைச் செய்த

படியால், யாரோ ஒருவர் உன்னை இங்கிருந்து வெளியே கொண்டு செல்வார்" என்றேன். அவன் இன்னும் முடமாக்கப்பட்டவனாகத் தான் இருக்கிறான். அவன் எனக்கு ஒரு கடிதம் எழுதி, "நான் கட்டாயமாக என்ன செய்ய வேண்டும்?" என்று கேட்டான்.

அதற்கு நான், "மனந்திரும்பு" என்றேன்.

அவன், "நீர் வந்து, இதை என்னை விட்டு எடுத்துப்போடும்" என்றான்.

நான், "நான் - அது உன்மேல் வந்த தற்கும் எனக்கும் எந்த சம்பந்தமும் கிடை யாது. நீயே அதை உன்மேல் வருவித்துக் கொண்டாய். 'தேவனால் அபிஷேகம் பண் ணப்பட்டவனை வருத்தமுண்டாக்குவதைக் காட்டிலும், (offend - உணர்ச்சியை புண் படுத்துவதைக் காட்டிலும், சினமூட்டுவதைக் காட்டிலும், வெறுப்பூட்டுவதைக் காட்டிலும்,

தீங்குசெய்வதைக் காட்டிலும், அவமதிப்பதைக் காட்டிலும், ஒழுங்கு மீறுவதைக் காட்டிலும், வரம்பு கடந்து போவதைக் காட்டிலும், தவறாக நடப்பதைக் காட்டிலும், கோபமூட்டுவதைக் காட்டிலும், உள்ளத்தைப் புண்படுத்துவதைக் காட்டிலும் - தமிழாக்கியோன்), உன்னுடைய கழுத்தில் ஏந்திரக் கல்லைக் கட்டி, நீ சமுத்தித்தின் ஆழங்களிலே அமிழ்ந்து போவது அதிக நலமாயிருக்கும்' என்று வேதாகமம் கூறுகிறது" என்றேன். அது சரியே. நாம் தேவனிடத்திலுள்ள நம்முடைய பயத்தையும் கிறிஸ்தவர்கள் பேரிலுள்ள மரியாதைகளையும் இழந்து விட்டோம். ஓ, நாம் எப்படியாக தேவனிடம் திரும்பி வந்தாக வேண்டியிருக்கிறது.

---

**(குறிப்பு: இந்தச் செய்தியின் இறுதி திருத்தம் இன்னும் முடியவில்லை.)**





# தேவன் எப்போதுமே தமது ஜனங்களுக்காக யுத்தம் செய்வார்

## (God will always fight for His people)

செய்தி: **காணக்கூடாததை நோக்கிப் பார்த்தல், ஆகஸ்டு 16, 1950, பாரா 4**

சகோ.வில்லியம் பிரன்ஹாம்

## கர்த்தருடைய தூதன்



கர்த்தருடைய தூதனின் புகைப்படத்தை ஒரு பாப்டிஸ்ட் போதகர் கண்டு எள்ளி நகைத்தார். பாருங்கள், அது தேவ தூஷணமாகும்.பாருங்கள்? அதற்கு மன்னிப்பே கிடையாது.

சகோ. பிரான்ஹாம்

*செய்தி: முறையிடுகிறது என்ன? சொல்!*

# நீங்கள் ஒருவருக்கொருவர் நகைச்சுவை மற்றும் ஏளனம் கூட நீங்கள் செய்யக் கூடாது

வேதாகமம் கூறுகிறது - இயேசு, "உங்கள் 'ஆம்' என்பது 'ஆம்' என்றும் உங்கள் 'இல்லை' என்பது 'இல்லை' என்றே இருக்கட்டும், இதற்கு மிஞ்சினது பாவத்தினால் வருகிறதாயிருக்கும்," என்றார். நீங்கள் ஒருவருக்கொருவர் நகைச்சுவை மற்றும் ஏளனம் கூட நீங்கள் செய்யக் கூடாது. நீங்கள் பேசுகின்ற ஒவ்வொரு உபயோகமற்ற சொல்லுக்கும் தேவன் உங்களை கணக்கொப்புவிக்கச் செய்வார். அதை நீங்கள் அறிவீர்களா? ஒவ்வொரு வீணான வார்த்தைக்கும் நீங்கள் கணக்கு கொடுக்க வேண்டும் என்று வேதம் கூறுகிறது. ஆகவே எப்படிப்பட்ட ஒரு ஜனமாக நாம் இருக்க வேண்டியவர்களாகவுள்ளோம்?

Rev William Branham

# தீர்க்கதரிசி பிரன்ஹாமை ஹிப்னாடிஸம் பண்ணி, நாயைப் போன்று குரைக்க வைக்க முயற்சித்தவனின் முடிவு

செய்தி: ஆபிரகாமோடு தேவனுடைய உடன்படிக்கை, 56-0428

...மரித்துப் போய் விழவும் முடியும், சரியாக இப்பொழுதே பக்கவாதம் தாக்கலாம். நான் கூட்டத்தில் அது சம்பவிப்பதைக் கண்டிருக்கிறேன். அது கூட்டங்களில் சம்பவிப்பதை எத்தனை பேர் எப்பொழுதாவது கேள்விப்பட்டிருக்கிறீர்கள்? அந்த இரவில் என்னை ஹிப்னாடிஸம் செய்வதற்காக அந்த ஆள் வந்து, அவன் அங்கே மேலே பால்(கனி)...யில் உட்கார்ந்து கொண்டிருந்ததை எத்தனை பேர் கேள்விப்பட்டிருக்கிறீர்கள்? அவன் அங்கே கீழே இறங்கி வந்து, என்னை ஹிப்னாடிஸம் பண்ணி, என்னை ஒரு நாயைப் போன்று குரைக்கச் வைக்கப் போவதாய் இருந்தான். பரிசுத்த ஆவியானவர் மறுபக்கம் திரும்பி, "பிசாசின் மகனே" என்றார். அவன் அந்த நேரம் முதற்கொண்டு பக்கவாதத்தினால் தாக்கப்பட்டான். அது ஏறக்குறைய மூன்று வருடங்களுக்கு முன்பு நடந்ததாகும். பாருங்கள்? அவர்கள் அவனை கட்டிடத்தை விட்டு வெளியே தூக்கிச் சென்றனர். உங்களால் தேவனோடு விளையாட முடியாது. நீங்கள் அதை விசுவாசித்தாக வேண்டும்.

Rev. William Branham


நான் அபிஷேகம்
பண்ணினவர்களை நீங்கள்
தொடாமலும்
1
2
என்னிடத்தில் விசுவாசமாயிருக்கிற
இந்தச் சிறியரில் ஒருவனுக்கு
இடறல் உண்டாக்குகிறவன்
எவனோ